ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# பழியோம் இகழோம்

- மதுரகவி தாஸன் தி கு அ வெங்கடேசன்

எம்பெருமானைப் புகழ்வோம் எனத் தொடங்கிய ஆழ்வார், அப்படி புகழப்புகுவது அவனை பழிப்பதே ஆகும் என்கிறார். ஏனெனில் - வேதங்களாலும், தேவர்களாலும் சொல்ல முடியாத அவன் புகழை நாம் சொல்வோம் எனப் புகுவது அவனுக்கு நாம் செய்யும் பழிப்பே ஆகும். அப்படி நாம் அவனைப் புகழப்புக்காமல் இருப்பதே நாம் அவனுக்குச் செய்யும் புகழ் என்றபடி.

அப்படி வாயால் புகழா விட்டாலும், நெஞ்சினால் செய்யலாமோ என்றால், அப்படிச் செய்வதும் அவனுக்கு நாம் செய்யும் இகழ்வேயாம்.

என்றாலும், புகழாமலோ மதியாமலோ இருக்கவும் நமக்கு ப்ரசக்தியில்லை.

"நா வாயில் உண்டே நமோ நாரணா என்று ஓவாது உரைக்கும் உரை உண்டே" என்கிறார் பொய்கையாழ்வார்.

எனவே நாவும் நெஞ்சும் படைத்த பயனாவது அவனை ஏற்ற முடியாமல் இருப்பதும் ஏற்றாமல் இருக்க முடியாததும் ஆகும்.

இது மஹநீயர்களுக்கும் பொருந்தும். ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும், பெருந்தகைகளையும் நம்மால் புகழவும் முடியாது, புகழாமல் இருக்கவும் முடியாது.

நிற்க.

நம்மால் புகழ முடியாவிட்டாலும், புகழாமல் இருக்க முடியாவிட்டாலும், புகழ்வோம் என ஆரம்பித்து அவர்களை இகழ்ச்சி செய்தோம் என்றும் இல்லாவிட்டாலும் சரி. இகழ்வோம் என்றே ஆரம்பித்து இகழாமலாவது இருக்க வேண்டுமே.

அதுவும் சிலருக்கு அமையாது போவதே விந்தை.

எம்பெருமான் காலத்திலேயே சிசுபாலாதிகளைப் பற்றி நாம் அறிகிறோம்.

ஆழ்வாரும் "கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும் சேட்பால் பழம்பகைவன் சிசுபாலன்" என்கிறார். அவனுடைய வசவு, "வையும்" என்று அவனைப் பணித்தவர்கள் செவியையும் சுடும் என்பது ஆழ்வார் வாக்கு.

இக்காலத்திலும் இவ்வகையானவர்கள் உண்டு.

ஆனால் சிசுபாலாதிகளும், அவனையோ ஏனையரையோ அவர்கள் இருக்கும் காலத்தில் அவர்கள் முன்னிலையிலேயே வைதவர்கள்.

இவர்களிலும் நீசர்களை நாம் காண்பதும், அவர்கள் வசவுகளைக் கேட்பதும், வலைத்தளங்களால் அதைப் படிக்க நேர்வதும் நம்முடைய துர்பாக்யமே. மறைந்தவர்களைப் பற்றி அவதூறாகப் பேசக்கூடாது என்பது மரபு. அவர்கள் கொள்கைகளை நாம் கண்டிக்கலாம். ஆனால், தங்களால் நேர்முகமாக பதில் சொல்ல முடியாதவர்களை, நாம் தனி மனிதர் விஷயமாகத் தாக்குவதோ, அவர்களை கீழ்த்தரமாகப் பேசுவதோ தகாது என்பது, மனித நாகரீகம். சாமான்யர்களுக்கே நிற்கும் இந்நாகரீகத்தை மஹநீயர்களிடத்தில் வைக்க வேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

தனக்கு நேரே தீங்கிழைத்தவனான ராவணனைப் பற்றி, அவனைக் கொன்ற பின் பெருமாள் சொல்லும் வார்த்தைக்கு விலையே கிடையாது. "மரணாந்தானி வைராணி நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜனம், க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரா: மமாப்யேஶ யதா தவ". இதற்கு உள்ளர்த்தம் பல உண்டு. மேலெழுந்தவாரியாக நோக்கினாலும், மரணத்துக்குப் பின் ஒருவரிடத்தில், அவன் நமக்கு நேர்விரோதியானாலும், நமக்கு வைரம் இல்லை என்கிறார். சுரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையில் கடுவிசை அரக்கனையும் இவ்வாறு நினைத்தவர் பெருமாள்.

அது நமக்குக் கூடாதாயினும், நாம் அறியாத மறைந்த பெரியவர்களைப் பற்றி தரக்குறைவாகப் பேசாமல் இருந்தால், தெய்வத்தனமை இல்லாவிட்டாலும், மனிதத் தன்மையாவது உடையவர்களாவோம்.

ஆனால் ஒரு சில வ்யக்திகளுக்கு இதுவும் அமையாது போவது விந்தையே. யாரோ சொன்னதையும், எங்கேயோ கேட்டதையும் கொண்டு மறைந்த பெரியவர்களைத் தூஷிக்கும் இவர்களுக்கு எம்பெருமான் தான் நல்லறிவைப் புகட்ட வேண்டும்.

உடன், ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும் என்றவிடத்து, இந்தப் பாபச் செயல்களைச் செய்வாரையும் சேர்த்துக் கொண்டு, அன்னவர்கள் நரகில் வீழாமல் இருக்க அவர்களுடன் துணையாய் இருப்பவர்கள் திருத்திப் பணிகொள்ள வேண்டும்.

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

---